(6 pages) **Reg. No. :** ....................................

**Code No. : 32107** **Sub. Code : SMTA 32**

B.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2020.

Third Semester

தமிழ் — Core

சங்க இலக்கியம்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாவிற்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பட்டினப்பாலையில் எந்த ஆறு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது?

(அ) வைகை (ஆ) காவிரி

(இ) பாலாறு (ஈ) தாமிரபரணி

2. பட்டினப்பாலையில் எந்த நாட்டின் சிறப்பு முதன்மையாகக் கூறப்பட்டுள்ளது?

(அ) சோழநாடு (ஆ) மகதநாடு

(இ) சேரநாடு (ஈ) பாண்டியநாடு

3. “வாலியோன் அன்ன வயக்கு ____________”?

(அ) நெல் (ஆ) நீலநிறக்கடல்

(இ) வெள்ளருவி (ஈ) மலை

4. “சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு” என்பதில் பெரும்பழம் உணர்த்தும் பொருள் யாது?

(அ) ஆன்மா (ஆ) காமம்

(இ) உயிர் (ஈ) காதல்

5. “மரையா மரல் கவர, மாரி வறப்ப ____________” என தொடங்கும் கலித்தொகைப் பாடல் யார்?

(அ) தலைவன் கூற்று (ஆ) பரத்தை கூற்று

(இ) தோழி கூற்று (ஈ) தலைவி கூற்று

6. “நாண் கொள் நுண் கோலின் ____________” என்ற அகநானூற்றுப் பாடலின் திணை என்ன?

(அ) மருதம் (ஆ) பாலை

(இ) குறிஞ்சி (ஈ) முல்லை

7. பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தினைப் பாடிய புலவர் யார்?

(அ) கபிலர் (ஆ) இடைக்காடனார்

(இ) நக்கீரர் (ஈ) பரணர்

8. “எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே” யார் கூற்று?

(அ) வல்வில் ஓரி(ஆ) அதியமான்

(இ) ஔவையார் (ஈ) கழைதின் யானையார்

9. இமயக்குன்றம் நிகர்க்கும் குன்று எது? ஏன் நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்?

(அ) உதகை (ஆ) யானைமலை

(இ) பரங்குன்று (ஈ) ஈங்கோய் மலை குன்று

10. திருவாதிரை முதல்வன் யார்?

(அ) திருமால் (ஆ) சிவன்

(இ) செவ்வேள் (ஈ) முருகன்

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) காவிரியின் சிறப்பு குறித்து பட்டினப்பாலை கறும் செய்தி யாது?

(அல்லது)

(ஆ) பட்டினப்பாலை மூலம் அறியலாகும் சோழநாட்டின் சிறப்புகளைக் கூறுக.

12. (அ) "யானும் ஓர் ஆடுகள மகளே" என்றும் ஆதிமந்தியாரின் உணர்ச்சியினைக் குறுந்தொகை பாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) நொதுமலர் வரைவின் கண் தோழி செவிலிக்கு அறத்தோடு நின்ற பாடல் கருத்தினை எடுத்துரைக்க.

13. (அ) வரைந்து கொள்ள வரவிருக்கும் தலைவனின் வரவைத் தோழி கூறும் பாங்கினை பரணர் எவ்வாறு சித்தரிக்கின்றார்?

(அல்லது)

(ஆ) தன்மேல் பழிகூறிய தலைவியைப் பரத்தை பழித்துரைக்கும் பாங்கினை அகநானூறு வழி நிறுவுக.

14. (அ) 'உரைசால் வேள்வி' புலப்படுத்தும் வாழியாதனின் சிறப்பு யாது?

(அல்லது)

(ஆ) "பிசிராந்தையாருக்கு இடம் ஒழிக்க" என்று கோப்பெருஞ்சோழன் கூறுவதற்கான காரணங்களை கூறுக.

15. (அ) திருமாலின் உருவும், பண்பும் பரிபாடலில் எங்ஙனம் போற்றப்படுகிறது?

(அல்லது)

(ஆ) வையையில் புனலாடுவார் செயலை விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளி.

(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) பட்டினப்பாலையில் புகார் நகரம் சிறப்பிக்கப்பட்டுள்ள பாங்கினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பட்டினப்பாலையில் காணப்படும் கொடிகளின் சித்தரிப்புகள் பற்றி விவரி.

17. (அ) நற்றிணைப் புலப்படுத்தும் அகவாழ்வைப் பாடல் பகுதி வழி புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தாய்க்குரைத்த பத்து குறித்து ஐங்குறுநூறு கூறும் செய்தியை தொகுத்துரைக்க.

18. (அ) "பிடியூட்டிப் பின் உண்ணும் களிறு" வழி கலித்தொகை காட்டும் அகவாழ்வு பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைவன் பொருட்வயிற் பிரிந்தால் தலைவி உயிர் வாழால் என்பதை தோழி கூறும் விதத்தினை புலப்படுத்துக.

19. (அ) புறநானூற்றில் சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனை முரஞ்சி முடிநாகனார் பாடிய பாடலை திணைத்துறைகளுடன் பொருத்தி எழுதுக.

(அல்லது)

(ஆ) "வலம்படுமுரசின் வாய் வாள் கொற்றத்து ..." என்ற பாடல் புலப்படுத்தும் செல்வக்கடுங்கோ வாழியாதனின் கொடை சிறப்புகள் பற்றி எழுதுக.

20. (அ) பரிபாடலில் திருப்பரங்குன்றம் எவ்வாறு சித்தரிக்கப்படுகிறது ?

(அல்லது)

(ஆ) வையையின் புகழ் வெள்ள பெருக்கில் ஆடிய மகளிரின் நீர் விளையாட்டினை விளக்குக.

———————